

# கார்ல் மார்க்சின் நினைவைப் போற்றுவோம்!

ஏங்கெல்ஸ் 1877ஆம் ஆண்டு பிரசுரித்த கார்ல் மார்க்ஸின் வாழ்க்கை வரலாறு என்ற சிறு நூலில் இருந்து ஒரு பகுதி இங்கு தரப்பட்டுள்ளது.

தமிழாக்கம்: சேலம் ஷோபனா

அறிவியல் வரலாற்றில் மார்க்ஸ் தனது பெயரைப் பொறித்துள்ள பல முக்கியமான கண்டுபிடிப்புகளில், இரண்டை மட்டும் நாம் இங்கு காண்போம். முதலாவது, உலக வரலாறு குறித்த கருத்தாக்கத்தில் அவர் ஏற்படுத்திய புரட்சி.

வரலாறு குறித்த முந்தைய பார்வையானது, வரலாற்று மாற்றங்களுக்கான காரணங்களை மனிதர்களின் மாறிவரும் எண்ணங்களில் தேட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்தது. மேலும், அனைத்து வரலாற்று மாற்றங்களுள் அரசியல் மாற்றங்கள் மிக முக்கியமானவை; அவையே முழு வரலாற்றையும் ஆதிக்கம் செலுத்துகின்றன என்றும் அது கருதியது. ஆனால், மனிதர்களின் மனதில் இந்த எண்ணங்கள் எங்கிருந்து வருகின்றன; அரசியல் மாற்றங்களுக்கான உந்து சக்தியாக எது உள்ளது என்ற கேள்வி கேட்கப்பட வில்லை. மத்திம காலகட்டத்தில், பிரான்ஸ் மற்றும் ஓரளவு இங்கிலாந்திலும் இருந்த வரலாற்றாசிரியர்கள் மட்டுமே, நவீன சித்தாந்தங்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். சமூக மற்றும் அரசியல் ஆதிக்கத்திற்கான ஐரோப்பிய வரலாற்றின் உந்து சக்தியானது நிலப்பிரபுத்துவத்திற்கும் வளர்ந்துவந்த முதலாளித்துவத்திற்கும் இடையே நடந்த போராட்டமே ஆகும் என்ற முடிவிற்கு இது அவர்களை இட்டுச் சென்றது.

இப்போது மார்க்ஸ், முந்தைய வரலாறு முழுவதும் வர்க்கப் போராட்டங்களின் வரலாறு என்பதை நிரூபித்துள்ளார். சிக்கலான, பலவகையான அனைத்து அரசியல் போராட்டங்களிலும் வர்க்கங்களின் சமூக மற்றும் அரசியல் ஆதிக்கத்தைப் பொறுத்தவரை, பழைய வர்க்கங்களுக்கு தங்களின் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதும், புதிதாக எழுச்சி பெறும் வர்க்கங்களுக்கு ஆதிக்கத்தைக் கைப்பற்றுதலும் மட்டுமே இவ்விரு வர்க்கங்களுக்கு இடையிலான பிரச்சினையாக உள்ளது. எவ்வாறாயினும், இந்த வர்க்கங்களின் தோற்றத்திற்கும் அவற்றின் தொடர்ச்சியான இருப்புக்கும் காரணங்கள் எவை? ஒரு சமூகம், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில், தன் வாழ்வாதாரத்திற்கான பொருள் உற்பத்தியை, அதைச் செய்வதற்கு ஏதுவான பௌதீக நிலைமைகளில் உற்பத்தி செய்து அதைப் பரிமாற்றம் செய்துகொள்வதால் அந்த நிலைமைகளே சமூக இருப்பிற்கு காரணமாக அமைகின்றன. மத்திம காலத்தின் நிலப்பிரபுத்துவ ஆட்சி, தங்களின் அனைத்து தேவைகளையும் தாங்களே உற்பத்தி செய்து கொண்ட சிறு விவசாய சமூகங்களின் தன்னிறைவுப் பொருளாதாரத்தின் மீது நிலைபெற்றிருந்தது. இதில் ஏறக்குறைய பரிமாற்றம் என்பது இல்லை; வெளிநாடுகளிடமிருந்து வந்த அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களிடமிருந்து ஆயுதம் ஏந்திய பிரபுக்கள் அவர்களைப் பாதுகாத்தனர். மேலும், ஓரளவு தேசிய அல்லது குறைந்தபட்சம் சமூக ஒருங்கிணைவை சாத்தியப்படுத்தினர். மத்திம காலகட்டத்தில், நிலப்பிரபுக்களுடன் ஏற்பட்ட போராட்டங்களினால் பல சலுகைகளைப் பெற்று, ஏற்கனவே நிலப்பிரபுத்துவ வரிசையில் சேர்ந்து சிறப்புரிமைகள் பெற்றிருந்த நகர்ப்புற முதலாளித்துவம், நகரங்கள் தோன்றியபோது, அவற்றுடன் தோன்றிய பிரத்தியேக கைவினைத் தொழில்கள், முதலில் உள்நாட்டிலும், பின்னர் சர்வதேச அளவிலும் ஏற்பட்ட வணிக உறவுகள் ஆகியவற்றால் வளர்ந்தது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்கு அப்பாற்பட்ட நிலப்பரப்புகளின் கண்டுபிடிப்பினால், பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து, முதலாளித்துவம் மிகவும் விரிவான வர்த்தக வாய்ப்புகளைப் பெற்றது. அதன் மூலம் அதன் தொழில்துறைக்கு ஒரு புதிய உத்வேகம் கிடைத்தது; மிக முக்கியமான கைவினைப்பொருட்கள் தொழிற்துறை உற்பத்தியால் மாற்றம் பெற்றன; அது பெருந்தொழிற்துறையால் மீண்டும் மாற்றம் பெற்றது; இது முந்தைய நூற்றாண்டின் கண்டுபிடிப்புகள், குறிப்பாக நீராவி இயந்திரத்தினால் சாத்தியமானது. மிகவும் வளர்ந்த நாடுகளில் பெருந்தொழிற்துறையானது, தன் பங்கிற்கு, நீராவி இயந்திரங்கள், ரயில்வே, மின்சாரம், தந்தி என புதிய தகவல் தொடர்பு சாதனங்களை உருவாக்கியதன் மூலம் பின்தங்கிய நாடுகளிலிருந்த பழைய உடல் உழைப்பு முறையை விரட்டியடித்து, வர்த்தகத்தில் தாக்கம் செலுத்தியது. நீண்ட காலத்திற்கு அரசியல் அதிகாரம், பிரபுக்கள் மற்றும் பிரபுக்களால் ஆதரிக்கப்பட்ட முடியரசுகளின் கைகளிலேயே இருந்தது. அரசியல் அதிகாரத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த போதிலும், முதலாளித்துவம் தனது கைகளில் சமூக செல்வத்தையும் சமூக அதிகாரத்தையும் மேலும் மேலும் குவித்தது. ஆனால் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் - மாபெரும் புரட்சிக்குப் பின்னர், பிரான்சில் - அது அரசியல் அதிகாரத்தையும் கைப்பற்றியதன் மூலம், இப்போது பாட்டாளி வர்க்கம் மற்றும் சிறு விவசாயிகள் மீது ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாக மாறியுள்ளது. சமூகத்தின் குறிப்பிட்ட பொருளாதார நிலைமை பற்றிய போதிய அறிவுடன், அனைத்து வரலாற்று நிகழ்வுகளும் இந்தக் கண்ணோட்டத்தில் மிக எளிமையான முறையில் விளக்கப்படக்கூடியவை - நமது தொழில்முறை வரலாற்று அறிஞர்களிடம் இது முற்றிலும் இல்லை என்பது உண்மைதான். அதே போன்று ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்தின் கருத்துகளும் சிந்தனைகளும், வாழ்க்கையின் பொருளாதார நிலைமைகளிலிருந்தும், இந்த பொருளாதார நிலைமைகளால் தீர்மானிக்கப்படுகின்ற அந்தக் காலகட்டத்தின் சமூக மற்றும் அரசியல் உறவுகளிலிருந்தும் மிக எளிமையாக விளக்கப்பட வேண்டும். வரலாறு முதல் முறையாக அதன் உண்மையான அடிப்படையில் விளக்கப்பட்டது; மனித இனத்திற்கு முதலில் உணவு, உடை, இருப்பிடம்தான் முக்கியத் தேவை. எனவே அவர்கள் அதிகாரப் போட்டிக்கு முன்னதாக, அரசியல், மதம், தத்துவம் போன்றவற்றைக் கைக்கொள்வதற்கும் முன்னதாக, உணவு, உடை, இருப்பிடத்திற்காக உழைக்க வேண்டும் என்ற தெளிவான, ஆனால் இதற்கு முன்னர் முற்றிலும் கவனிக்கத் தவறிய உண்மை - இறுதியாக அதன் வரலாற்று உரிமையைப் பெற்றது.

எவ்வாறாயினும், வரலாறு குறித்த இந்தப் புதிய புரிதல், சோசலிசக் கண்ணோட்டத்திற்கு உச்சபட்ச முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முந்தைய வரலாற்று நிகழ்வுகள் அனைத்தும் வர்க்க மோதல்கள் மற்றும் வர்க்கப் போராட்டங்களின் காரணமாகவே நிகழ்ந்துள்ளன என்பதையும், ஆளும் மற்றும் ஆளப்படும், சுரண்டும் மற்றும் சுரண்டப்படும் வர்க்கங்கள் எப்போதும் இருந்துள்ளன என்பதையும், மனிதகுலத்தின் பெரும்பகுதி எப்போதும் கடினமான உழைப்பைச் செலுத்தி அதற்கு ஈடாக சிறிய அளவே மகிழ்ச்சியைப் பெற்றுள்ளது என்பதையும் இது காட்டுகிறது. ஏன் இவ்வாறு நிகழ்ந்தது? மனிதகுல வளர்ச்சியின் அனைத்து முந்தைய கட்டங்களிலும், உற்பத்தி மிகவும் சிறிதளவே வளர்ச்சி

பெற்றது. எப்போதும் பெரும்பகுதி மக்கள், தங்களின் சொற்ப வாழ்வாதாரத் தேவைகளுக்காகவும், இப்பெரும்பகுதி மக்களின் உழைப்பைச் சுரண்டி, உழைக்காமல் வாழ்ந்த ஒரு சில பணக்காரர்களின் சுகபோகத்திற்காகவும் கடினமான உழைப்பைச் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர்; அதனால் பெறப்பட்ட ஒட்டுமொத்த முன்னேற்றமும் உழைக்காமல் இச்சலுகையை அனுபவித்த சிறிய கூட்டத்தின் செயல்பாடுகளினாலேயே பெறப்பட்டதாக, அந்த ஒரு சிலருக்கு மட்டுமே உரியதாக மாற்றிக் கொள்ளப்பட்டது. வரலாறு எப்போதும் இந்த முரண்களுக்கிடையே மட்டுமே வளர்ச்சி பெற்றது.

வரலாறு குறித்த இந்த ஆய்வு, முந்தைய வர்க்க ஆட்சிக்கு இயற்கையான மற்றும் நியாயமான விளக்கத்தை அளிக்கிறது. இல்லையெனில் கொடுமைகளே பெருமையான வரலாறுகளாக விளக்கப்பட்டிருக்கும்; மேலும், இப்புதிய ஆய்வு இன்றைய காலகட்டத்தில் உற்பத்தி சக்திகளில் ஏற்பட்டுள்ள மிகப்பெரும் வளர்ச்சியின் விளைவாக, குறைந்தபட்சம் மிகவும் முன்னேறிய நாடுகளிலாவது, மனித குலத்தை சுரண்டுபவர்களாகவும், சுரண்டப்படுபவர்களாகவும், ஆள்பவர்களாகவும் ஆளப்படுபவர்களாகவும் பிரித்து ஆதிக்கம் செலுத்துவதற்காக முன்வைக்கப்பட்ட கடைசி சொத்தை காரணமும் மறைந்துவிட்டது. ஆளும் பெருமுதலாளி வர்க்கம் தனது வரலாற்றுப் பணியை நிறைவேற்றியுள்ளது; இனி, அது சமூகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கத் தகுதியற்றது என்பதோடு, உற்பத்தியின் வளர்ச்சிக்குத் தடையாகவும் மாறிவிட்டது. இதனை அனைத்து நாடுகளிலும் நிலவும் வர்த்தக நெருக்கடி, தொழில் துறையில் ஏற்பட்டுள்ள சரிவு, பொருளாதார நெருக்கடிகள், குறிப்பாக கடைசிப் பொருளாதாரப் பெருமந்தம் ஆகியவை நிரூபிக்கின்றன. வரலாற்றின் தலைமை பாட்டாளி வர்க்கத்திடம் சென்றுவிட்டது. அது சமுதாயத்தில் முழுமையாக நிலைபெற்றிருப்பதன் காரணமாக, அனைத்து விதமான வர்க்க ஆதிக்கத்தையும், அனைத்து விதமான அடிமைத்தனத்தையும், அனைத்துவிதமான சுரண்டலையும் முற்றிலுமாக ஒழிப்பதன் மூலம் மட்டுமே தன்னை விடுவித்துக் கொள்ள முடியும். முதலாளித்துவ வர்க்கத்தின் கட்டுப்பாட்டை மீறி வளர்ந்த சமூகத்தின் உற்பத்தி சக்திகள், சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் உற்பத்தியில் பங்கேற்பது மட்டுமல்லாது, அதனால் உருவாக்கப்படும் செல்வவளம் பகிர்ந்தளிக்கப்படுவதிலும், அதை நிர்வகிப்பதிலும் பங்கேற்கக்கூடிய ஒரு நிலையைக் கொண்டு வருவதற்காக, அதனுடன் தொடர்புடைய பாட்டாளி வர்க்கம் சமூகத்தின் தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றுவதற்காகக் காத்திருக்கின்றன. மேலும், இது சமூகத்தின் உற்பத்தி சக்திகள் மேலும் வளர்வதற்கும், திட்டமிட்ட உற்பத்தி செயல்பாட்டின் மூலம், ஒட்டுமொத்த வளர்ச்சியை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கும். இதன் மூலம், அனைவருக்கும், நியாயமான அனைத்துத் தேவைகளையும் மேலும் மேலும் அதிக அளவில் உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

மார்க்சின் இரண்டாவது முக்கியமான கண்டுபிடிப்பு, மூலதனத்திற்கும் உழைப்புக்கும் இடையிலான உறவு குறித்த இறுதியான விளக்கமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இன்றைய சமூகத்தில், தற்போதுள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழ், தொழிலாளி முதலாளியால் எவ்வாறு சுரண்டப்படுகிறான் என்பதை நிரூபிப்பதாகும். எல்லாச் செல்வங்களும், எல்லா மதிப்புகளும் உருவாவதற்கு உழைப்பே ஆதாரம் என்ற கருத்தை அரசியல் பொருளாதாரம் முன்வைத்ததிலிருந்து, இந்தக் கேள்வி தவிர்க்க முடியாததாகிவிட்டது: அப்படியானால், ஒரு கூலித் தொழிலாளி தனது உழைப்பால் உருவாக்கப்பட்ட மதிப்பிற்கான முழுத் தொகையையும் கூலியாகப் பெறுவதில்லை என்ற உண்மையுடன் இதை எவ்வாறு சமன் செய்வது? அவரது உழைப்பால் உருவாக்கப்பட்ட மதிப்பின் ஒரு பகுதியை அவர் முதலாளியிடம் ஒப்படைக்க வேண்டுமா? இந்தக் கேள்விக்கு விஞ்ஞான ரீதியான சரியான பதிலை அளிக்க முதலாளித்துவப் பொருளாதார வல்லுனர்களும் சோசலிஸ்டுகளும் பாடுபட்டனர். ஆனால் அது அவர்களால் இயலவில்லை. இறுதியில், மார்க்ஸ் இதற்கான தீர்வைக் கண்டுபிடித்தார். இந்தத் தீர்வு பின்வருமாறு: இன்றைய முதலாளித்துவ உற்பத்தி முறை இரண்டு சமூக வர்க்கங்களின் இருப்பை முன்னிறுத்துகிறது - ஒருபுறம், உற்பத்திச் சாதனங்கள் மற்றும் வாழ்வாதாரங்களைக் கொண்ட முதலாளிகள், மறுபுறம், இந்த உடைமையிலிருந்து விலக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தினர். பாட்டாளிகள், தாங்கள் விற்பனை செய்வதற்கு, ஒரே ஒரு சரக்கை மட்டுமே உடைமையாகக் கொண்டுள்ளனர். அது, அவர்களின் உழைப்புச் சக்தி. எனவே தாங்கள் உயிர் பிழைக்கத் தேவையான வாழ்வாதாரத்தைப் பெறுவதற்காக, அவர்கள் இந்த உழைப்புச் சக்தியை விற்க வேண்டும். எவ்வாறாயினும், ஒரு பண்டத்தின் மதிப்பு, அதன் உற்பத்திக்கும் மறுஉற்பத்திக்கும் தேவையான, அதனுள் பொதிந்துள்ள சமூக உழைப்பின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது; சராசரி மனிதனின் உழைப்புச் சக்தியின் மதிப்பு அவனது ஒரு நாள், மாதம் அல்லது வருடத்திற்கான இந்த உழைப்பு சக்தியைப் பராமரிக்கத் தேவையான ஒரு நாள், மாதம் அல்லது வருடத்திற்கான வாழ்வாதாரத்தில் பொதிந்துள்ள உழைப்பின் அளவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. ஒரு தொழிலாளியின் ஒரு நாளுக்கான வாழ்வாதாரத்திற்கான உற்பத்திக்கு ஆறு மணிநேர உழைப்பு தேவைப்படுகிறது என்று வைத்துக்கொள்வோம்; அல்லது அதிலுள்ள உழைப்பு ஆறு மணிநேர உழைப்பின் அளவைக் குறிக்கிறது என்றும் கூறலாம். அப்படியானால், ஒரு நாளுக்கான உழைப்புச் சக்தியின் மதிப்பு ஆறு மணி நேர உழைப்பிற்கான பண மதிப்பாகும். நமது தொழிலாளியை வேலைக்கு அமர்த்தும் முதலாளி, அதற்கு ஈடான இந்தத் தொகையைச் செலுத்தி, அவனுடைய உழைப்புச் சக்தியின் முழு மதிப்பையும் பெற்றுக்கொள்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இப்போது தொழிலாளி ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் வேலை செய்கிறான் என்றால், அவன் பெற்ற பண மதிப்பிற்கான முழு உழைப்பையும் முதலாளிக்காகத் தந்துவிட்டான் என்று பொருள். இதில் கொடுத்ததும் பெற்றதும் சமமாகிவிட்டதால் முதலாளிக்கு அதில் லாபம் எதுவும் இருக்காது; எனவே முதலாளி இந்த விஷயத்தை முற்றிலும் வேறுவிதமாகப் பார்க்கிறார். எனவே அவர், “நான் இந்த தொழிலாளியின் உழைப்பு சக்தியை ஆறு மணிநேரத்திற்கு அல்ல, ஒரு நாள் முழுவதும் உழைப்பதற்கான விலையைக் கொடுத்து வாங்கினேன் என்று கூறி, சூழ்நிலைக்கு ஏற்ப அவர் அந்தத் தொழிலாளியை 8, 10, 12, 14 அல்லது அதற்கு மேற்பட்ட மணிநேரம் வேலை செய்யவைக்கிறார். ஏழாவது, எட்டாவது மற்றும் அதற்கு மேற்பட்ட மணிநேரம் என்னும் இந்த ஊதியம் பெறாத உழைப்பின் விளைபொருள், முதலாளியின் பைக்குள் அடைக்கலமாகிவிடுகிறது.

இவ்வாறு முதலாளியின் சேவையில் உள்ள தொழிலாளி தனது உழைப்புச் சக்தியின் மதிப்பை மீண்டும் உருவாக்குவது மட்டுமல்லாமல், அதற்கு மேலும், முதலாளியால் எடுத்துக் கொள்ளப்படும் உபரியையும் உருவாக்குகிறார். அது பின்னர், திட்டவட்டமான பொருளாதார விதிகளின்படி, நில வாடகை, லாபம், மூலதனக் குவிப்பு ஆகியவையாகப் பிரிக்கப்பட்டு ஒட்டுமொத்த உழைப்பாளி அல்லாத வர்க்கங்களால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. சுருக்கமாக, உழைப்பாளி அல்லாத வர்க்கங்களால் நுகரப்படும் அல்லது குவிக்கப்பட்ட அனைத்து செல்வங்களும் இந்த அடிப்படையிலேயே உருவாகின்றன. எவ்வாறாயினும், உரிமையாளர் - அடிமை அல்லது நிலப்பிரபு - அடிமை சுரண்டலைப் போலவே, இன்றைய முதலாளிகளின் செல்வச் செழிப்பு, மற்றவர்களின் ஊதியமற்ற உழைப்பைக் கைப்பற்றுவதில் உள்ளது என்பதை இது நிரூபித்தது. ஊதியம் பெறாத உழைப்பு சுரண்டப்பட்ட விதம் மற்றும் முறை ஆகியவற்றில் உள்ள வேறுபாடுகள் உண்டு என்பது தவிர, இவை அனைத்தும் சுரண்டலின் வெவ்வேறு வடிவங்களே.

எவ்வாறாயினும், தற்போதைய சமூக ஒழுங்கில் உரிமை, நீதி, உரிமைகள் மற்றும் கடமைகளில் சமத்துவம் நிலவுவதாகவும், பொது நலன்களில் நல்லிணக்கம் நிலவுவதாகவும் காட்சிப்படுத்தும் உடைமை வர்க்கங்களின் பாசாங்குகளை இது தகர்த்து, இன்றைய முதலாளித்துவத்தை அம்பலப்படுத்தியது. இன்றைய முதலாளித்துவ சமூகத்தின் சுரண்டும் தன்மை, அதற்கு முன்பு நிலவிய சமூக அமைப்புகளிலிருந்து மாறுபட்டதாக இல்லை. செல்வ வளங்களைத் தமதாக்கி வைத்திருப்போர் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்துவரும் அதே வேளையில் சுரண்டப்படும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சிறு எண்ணிக்கையிலானவர் பெரும்பான்மையான மக்களை சுரண்டுவதற்கான ஒரு பெரிய நிறுவனமாக முதலாளித்துவ சமூகம் உள்ளது. நவீன, விஞ்ஞான சோசலிசம் இந்த இரண்டு முக்கியமான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது.

*(இணையதள இணைப்பு: https://www.marxists.org/archive/marx/works/1877/06/karl-marx.htm#:~:text=After%20the%20conviction%20of%20the,other%20hand%2C%20to%20writing%20for )*


**FORM**
**(Sec Rule 8)**

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | 6/16, By- Pass Road, Madurai - 625 018. |
| 2. Periodicity of Publication | : | Monthly |
| 3. Printers Name | : | M.N.S.Venkataraman |
| Nationality | : | Indian |
| Address | : | 6-158 / NA Sourth Street M.Reddiapatti Taluk, Aruppukkottai, Vairudhunagar Dist. |
| 4. Publisher's Name | : | M.N.S.Venkataraman |
| Nationality | : | Indian |
| Address | : | 6-158 / NA Sourth Street M.Reddiapatti Taluk, Aruppukkottai, Vairudhunagar Dist. |
| 5. Editor's Name | : | N.Gunasekaran |
| Nationality | : | Indian |
| Address | : | 27,Vaidyaram Street, T.Nagar Chennai - 600 017 |
| 6. Name and address of individuals who own the newspaper and partners of shareholders holding more than one percent of the total capital. | : | Toilling Masses Welfare Trust 27,Vaidyaram Street, T.Nagar Chennai - 600 017 |

I,M.N.S.Venkataraman, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Madurai
March 2024

**M.N.S.Venkataraman**
Publisher


http://marxistreader.app



http://marxistreader.app